# ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிகைச் செய்தி

அரசாணை நிலை எண்.230 மற்றும் 231, உயர் கல்வித்(F2)துறை, நாள்.06.10.2025-இன்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கான 4000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு கடந்த 14.03.2024 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை எண். 02 / 2024 இரத்து செய்யப்பட்டு தற்போது, ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளம் (**Website:https://www.trb.tn.gov.in**) வாயிலாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரிகளுக்கான 2708 உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடங்களை நேரடி நியமன முறையில் நிரப்புவதற்கான புதிய அறிவிக்கை எண்.04/2025 இன்று (16.10.2025) வெளியிடப்படுகிறது. பாடவாரியான காலிப் பணியிட விவரங்கள், கல்வித் தகுதி, வயது மற்றும் விண்ணப்பம் செய்வதற்கான அனைத்து விவரங்களும் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க (Online Application) **17.10.2025** முதல் **10.11.2025** வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

**ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கை எண்**:12/2019, **நாள்**.28.08.2019 & 04.10.2019 **மற்றும் அறிவிக்கை எண்**: 02 / 2024, **நாள்**.14.03.2024**இன்படி**, **விண்ணப்பித்த பணிநாடுநர்கள் இப்புதிய அறிவிக்கையின்கீழ் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். இவர்களுக்கு மட்டும் இப்புதிய விண்ணப்பத்திற்கான தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் மற்றும் வயது வரம்பில் தளர்வும் வழங்கப்படுகிறது.**

நாள் : 16.10.2025

இடம் : சென்னை – 06 **தலைவர்**